செ. கு. எண்: 124 நாள்:06.10.2019

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் ‘‘ஆயுத பூஜை’’ மற்றும் “விஜயதசமி” வாழ்த்துச் செய்தி

நவராத்திரி பண்டிகையின் ஒன்பதாவது நாளில் ஆயுத பூஜையும், பத்தாவது நாளில் விஜயதசமி திருநாளையும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் என் அன்பிற்குரிய தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி திருநாள் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நவராத்திரி எனப்படும் ஒன்பது திருநாட்களில், முதல் மூன்று நாட்கள் துணிவைத் தரும் மலைமகளையும், அடுத்த மூன்று நாட்கள் செல்வத்தை வாரி வழங்கும் திருமகளையும், இறுதி மூன்று நாட்கள் அழிவில்லா செல்வமான கல்விச் செல்வத்தை அருளும் கலைமகளையும், மக்கள் போற்றி வணங்குவது நவராத்திரி பண்டிகையின் சிறப்பாகும்.

உழைப்பிற்கு மதிப்பளிக்கும் வகையில், மக்கள் தங்களது தொழிலுக்கு ஆதாரமாக விளங்குகின்ற தொழில் கருவிகளை இறைபொருட்களாக பாவித்து, தொழில் வளம் பெருகி, வாழ்வு வளம்பெற வேண்டும் என்று அப்பொருட்களுக்கு பூஜை செய்து வழிபடும் திருநாளே ‘‘ஆயுத பூஜை’’ நன்னாளாகும்.

வெற்றி திருநாளாம் விஜயதசமி திருநாளன்று தொடங்கப்படும் நற்காரியங்கள் அனைத்தும் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையுடன், மக்கள் இறைவனை வணங்கி, கல்வி, கலை, தொழில் போன்றவற்றை தொடங்கி விஜயதசமி திருநாளை கொண்டாடுவார்கள்.

இத்தகைய சிறப்பு மிக்க ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி திருநாட்களை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும், அனைத்து நலன்களையும், வளங்களையும் பெற்று, சீரோடும் சிறப்போடும் மனமகிழ்வுடன் வாழ்ந்திட எனது உளமார்ந்த நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**